**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**
**ஜனவரி–பிப்ரவரி 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – **1** இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – **2**இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு **3** மதிப்பெண்கள். பிரிவு – **3**இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் **3** பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு **15** மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளச் செய்யுள் உறுப்புகள் எத்தனை?
2. பொதுவாகத் தமிழ் எழுத்துகளை எவ்வாறு பகுக்கலாம்?
3. கனிச்சீரின் வேறுபெயர் என்ன?
4. சொல் நிலையில் அமையும் தொடை எது?
5. செப்பலோசை எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
6. வெண்கலிப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. கட்டளை என்பதன் பொருள் யாது?
8. ஆசு எழுத்துகள் யாவை?
9. தண்டியலங்காரம் கூறும் சொல்லணிகள் எத்தனை? பொருள் அணிகள் எத்தனை?
10. பொருள் தொடர்ச் செய்யுள் நூல்கள் இரண்டினைக் கூறு.
11. ஒழுகிசை என்பது யாது?
12. சமாதி என்பதற்கு ஒரு சான்று தருக.
13. காரக ஏது தோன்றுவதற்குக் கூறப்படும் காரணங்கள் யாவை?
14. தன்மேம்பாட்டு உரை அணி என்றால் என்ன?
15. விரோத அணி எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. குற்றியலிகரம் சான்றுடன் எழுதுக.
2. எழுவகைத்தளைகளைக் குறிப்பிடுக.
3. வாயுறை வாழ்த்து என்றால் என்ன?
4. கடைக்கூழை முரண் சான்றுடன் விளக்குக.
5. தண்டியலங்காரத்தின் தனிச் சிறப்புகள் யாவை?
6. காப்பியங்களில் இடம்பெறும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் யாவை?
7. தீவக அணியின் பெயர்க்காரணம் தருக.
8. பரியாய அணிக்கும் ஒட்டு அணிக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சீர்களும் அவை தோற்றுவிக்கும் தளைகளும் குறித்து விவரி?

2. (அ) ஆசிரியப்பாவின் இனங்கள் – விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்யுள் வகைகளை விளக்கி கட்டுரை எழுதுக.

3. (அ) கௌடம் – வைதருப்பம் வேறுபாடு கூறுக.

(அல்லது)

(ஆ) உருவக அணியின் வகைகளை விளக்கி எழுதுக.

***